## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (28.03.2015 முதல் 01.04.2015)

**அறிக்கை எண் 24/2015** **தேதி: 27.03.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 27°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 20°செ முதல் 23°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் வறண்ட வானிலையே காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு ( 28.03.2015 முதல் 01.04.2015)**

வரும் நாட்களில் வானம் பெருபம்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். 31.3.15 மற்றும் 01.4.15 ஆகிய தினங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 25 முதல் 42 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ முதல் 12 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 28.03.15 | 0 | 36 | 24 | 3 | 75 | 25 | 10 | வட கிழக்கு |
| 29.03.15 | 0 | 36 | 25 | 2 | 77 | 27 | 12 | தெற்கு |
| 30.03.15 | 0 | 37 | 25 | 3 | 79 | 30 | 11 | தென் மேற்கு |
| 31.03.15 | 2 | 37 | 25 | 5 | 83 | 38 | 12 | தென் மேற்கு |
| 01.04.15 | 5 | 36 | 24 | 6 | 85 | 42 | 12 | தென் மேற்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ மழையுடன் கூடிய சுழல் காற்று வர வாய்ப்புள்ளதால் வாழை மரத்திற்கு முட்டு கொடுப்பதன் மூலம் மரங்கள் சாய்வதை தடுக்கலாம்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி வாழைக்கு உரமிடவும்.
- ✓ காணப்படும் வறண்ட வானிலையால் எள்ளில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் அதிகமாக வாய்ப்புள்ளது. இது பூவிதழ் நோயை பரப்பும் தன்மை கொண்டதால் விவசாயிகள் வயலை கண்காணித்து தாக்குதல் தென்பட்டால் மோனோகுரோட்டோபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி வீதம் கலந்து தெளிப்பதன் மூலம் இந்த பூச்சியினை கட்டுப்படுத்தலாம்.
- ✓ பூக்கும் தருவாயிலுள்ள எள் பயிருக்கு மண்ணின் ஈரப்பதத்திற்கு ஏற்றவாறு நீர் பாய்ச்சவும்.
- ✓ தற்போது நிலவும் வறண்ட வானிலையால் கோழிகளுக்கு வெப்ப அயற்சி ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் ஒரு டன் தீவனத்திற்கு 1 முதல் 2 கிலோ சோடியம் பை கார்பனேட் (சோடா உப்பு) கலந்து போடவும், மேலும் எலக்ட்ரோலைட் பவுடரையும் கலந்து கொடுக்கவும். சர்க்கரை ஆலைக்கழிவு அல்லது எண்ணெயை தீவனத்துடன் கலப்பதன் மூலம் காற்றின் மூலம் தீவனம் வீணாவதை தடுக்கலாம்.
- ✓ பொதுவாக கோடை கால மழையுடன் இடி, மின்னல் வர வாய்ப்புள்ளதால் கால்நடைகளை மழை பெய்யும் பொழுது கொட்டகைக்குள் கட்டவும்.

## குறுஞ்செய்தி

- ✓ மழையுடன் கூடிய சுழல் காற்று வர வாய்ப்புள்ளதால் வாழை மரத்திற்கு முட்டு கொடுப்பதன் மூலம் மரங்கள் சாய்வதை தடுக்கலாம்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.